museum of modern
and contemporary art
sri lanka

**Quarterly Newsletter #12 – October 2025**

எமது தற்காலிக வளாகத்திலிருந்து 2025 ஜூன் மாதம் வெளியேறியதிலிருந்து, பயிற்சி, ஆராய்ச்சி, கூட்டிணைவுகள் ஆகியவற்றுடன் பிராந்திய மற்றும் சர்வதேச தொடர்புகளை விரிவுபடுத்துவதை மையமாகக் கொண்ட அடுத்த கட்ட வளர்ச்சியில் நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கை அருங்காட்சியகம் (MMCA இலங்கை) ஆழ்ந்து ஈடுபட்டு வந்தது.

**பிராந்தியத்தில் தொடர்புகளை ஏற்படுத்தல்**

இந்தியாவின் கொல்கத்தாவில் முன்னெடுக்கப்பட்ட 14 வது பரிசோதனை எடுத்தாளுநர்கள் மையத்தில் (ஜூலை 18–19) நிகழ்வில் நமது தலைமை கண்காணிப்பாளர் **ஷாமினி பெரேரா** உரையாற்றினார். இந் நிகழ்வானது பரிசோதனை கற்றல் நிகழ்ச்சித்திட்ட அறக்கட்டளையால் ஒழுங்கு செய்யப்பட்ட இந் நிகழ்ச்சியில் அவரோடு **தினால் சஜீவ** (உதவி எடுத்தாளுனர்), **நிமாயா ஹரிஸ்** (செயற்திட்ட எடுத்தாளுநர்) மற்றும் **கௌமதி ஜயவீர** (பதிப்பாசிரிய உதவியாளர்) ஆகியோர் கலந்து கொண்டனர். ஜூலை 20 ம் திகதி அன்று புரோ ஹெல்வெட்டியா நியூ டெல்ஹி ஏற்பாடு செய்திருந்த ‘திருத்தி மீட்கும் நடவடிக்கை: நிகழ்ச்சி நடாத்தி, தீர்வு கண்டு & எதிர்காலம் அமைத்தல்’ (An Act of Repair: Hosting, Healing and the Future) என்ற குழு விவாதத்திலும் பெரேரா பங்கேற்றார்.

ஜூலை மாத இறுதியில், புகைப்படத்துறையில் ஈர் நூற்றாண்டை நோக்கிய இமேஜ் வேர்ல்ட்ஸ் நிகழ்வு நியூ டெல்ஹியில் இடம்பெற்றதுங்கு ‘நவீனனத்தைச் சட்டகமைத்தல்: மினெட் டி சில்வா காப்பகம் மற்றும் பின் கொலனித்துவ பிம்ப உருவாக்கம்’ எனும் ஆய்வுக் கட்டுரையை **நிமாயா ஹரிஸ்** சமர்ப்பித்தார். இந் நிகழ்வானது ஒஃப்செட் ப்ரொஜெக்ட்ஸ், அல்காசி அறக்கட்டளை மற்றும் மேஸ் கெலெக்டிவ் ஸ்ற்டூடியோவால் ஏற்பாடு செய்யப்பட்டது (ஜூலை 25–26). இதன் மூலம், உலக நினைவுச்சின்ன நிதியத்துடன் இணைந்து MMCA இலங்கை செயல்படுத்தி வரும் ஒரு டிஜிட்டல் காப்பகத் திட்டம் குறித்த விழிப்புணர்வை அவர் ஏற்படுத்தினார்.

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

ஆசியாவிலும் அதற்கு அப்பாலும் பரந்து நிற்கும் கலை மற்றும் கலாச்சார சமூகத்திற்குள் இருக்கும் தொடர்புகளை வலுப்படுத்துவதில் MMCA இலங்கை முன்னெடுக்கும் தொடர்ச்சியான முயற்சிகளை இந்த நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

நியூ டெல்ஹியில் இடம்பெற்ற ஏழாவது செயற்திட்டத்தில் **தினால் சசீவ** பங்குபற்றி இத் தொடர்புகள் மேலும் விரிவடைந்தன. கோஜ் சர்வதேச கலைஞர்கள் சங்கமானது கோத் நிறுவனம்/மக்ஸ்முல்லே பவன் உடன் இணைந்து இந் நிகழ்வினை நடாத்தியது. அத்துடன், **சந்தே ஹண்டி** (சிரேஷ்ட எடுத்தாளுநர்) வட கொரியாவில் இடம்பெற்ற 2025 Gwangju Biennale Academy International Curator Course (GBICC) ல் கலந்து கொண்டார். அங்கு அவர் செப்டெம்பர் 15ம் திகதி உரையாற்றி உள்ளதுடன் ஒரு பயிலரங்கையும் நடாத்தியுள்ளார்.

**தீவிர அருங்காட்சியக பயிற்சி 4: நவீன கட்டிடங்களை ஆவணப்படுத்துதல்**

எங்கள் ஊர் கொழும்பில் இற்றைப்படுத்தப்பட்ட தொழிற்துறை பயிற்சித் திட்டத்தினை நாம் ஒழுங்கு செய்தோம் – தீவிர அருங்காட்சியக பயிற்சி. இதில் ஆறு நிறுவனங்கள் மற்றும் 19 பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர்.

தீவிர அருங்காட்சியக பயிற்சி 4: நவீன கட்டடப் பாரம்பரியத்தை பதிவு செய்து, பாதுகாக்கும் முறைகளில் கவனம் செலுத்திய நவீன கட்டிடங்களை ஆவணப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டமானது செப்டெம்பர் 29 முதல் ஒக்டோபர் 2, 2025 வரை நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில், ‘கட்டடக்கலை பாரம்பரியத்தை ஆவணப்படுத்தல் பற்றிய அறிமுகம்: புகைப்பட வரைபடவியல்’ என்ற தலைப்பில் விருது பெற்ற ஃபக்றடம் அறக்கட்டளையைச் சேர்ந்த **இம்ரான் கானின்** பயிலரங்குகள் இடம்பெற்றன. சம காலத்தில், இதே விடயம் குறித்து ‘நவீன கட்டிடங்களை ஆவணப்படுத்துதல்’ என்ற தலைப்பில் உலக நினைவுச்சின்ன நிதியத்தின் **ஜோன் டாலிங்டன்** மற்றும் **ஜேவியர் ஒஸ் ஒசின்** ஆகியோர் தலைமையிலான பயிலரங்கும் இடம்பெற்றது.

**உலக நினைவுச்சின்ன நிதியத்துடன்** இணைந்து **பிரிட்டிஷ் கவுன்சிலின்** ஆதரவுடன் உருவாக்கப்பட்ட இந்த ஆழ் அருங்காட்சியக நிகழ்வானது நவீன கட்டிடக்கலை இலகுவில் கிடைக்கக் கூடிய வகையிலும் கூட்டிணைவாகவும்

சர்வதேச அளவில் பொருத்தமானதாகவும் அமையக் கூடிய பற்றிய பயிற்சி குறித்துச் செயற்படும் MMCA இலங்கையின் அர்ப்பணிப்பினை அடிக்கோடிட்டுக் காண்பித்தது.

**ஆய்வினை மெருகேற்றல்**

சேகரிப்புகளையும் காப்பகங்களையும் பட்டியலிட்டு, கணணிமயமாக்குதல் தான் எமது தற்போதைய ஆய்வின் முக்கியமானதோர் அம்சம் ஆகும். ஆய்வு உதவியாளர் **திலாஷினி கார்த்திகேசுவும்** செயற்பாட்டாளப் பயிலுநர்கள் **யசாஸ்வி முனசிங்க** மற்றும் **ஆறொன் செனவிரத்ன** ஆகியோரும் இதற்காக ஆய்வு மற்றும் காப்பக நடைமுறைகளில் பயிற்சி பெற்றுள்ளனர். இம் மூவரும் MMCA இலங்கையின் வருகை கல்வியாளர்களாகத் தமது பயணத்தைத் தொடங்கியவர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்வதில் எமக்கு மகிழ்ச்சி. அடுத்த தலைமுறை அருங்காட்சியக நிபுணர்களை முன்னேற்றுவதில் அருங்காட்சியகத்தின் அர்ப்பணிப்பை இது வெளிப்படுத்தி நிற்கிறது.

**வெற்றிக் கொண்டாட்டங்கள்**

**அனோமா ராஜகருணா (பி.1965)** இயக்கிய **'No More Land' (2024)** ஆவணப்படத்திற்கு இந்தியாவின் கொல்கத்தாவில் நடைபெற்ற 8 வது தெற்காசிய குறும்பட விழாவில் சத்யஜித் ரே வெண்கல விருது (ஆவணப்படம்) வழங்கப்பட்டது என்பதைத் தெரிவிப்பதில் எமக்குப் பெருமகிழ்ச்சி. MMCA இலங்கையால் நியமிக்கப்பட்ட இப் படம் ஐரோப்பிய ஒன்றியத்தின் தாராள நிதியுதவியுடன் SEDR ஆதரவளிக்க ப்ரிட்டிஷ் கவுன்சிலால் அமுல்படுத்தப்பட்டது.

மேலும், **இருஷி தென்னக்கோன் (பி.1989), சுமேத கெலேகம (பி.1988),** மற்றும் **சுமுது அதுக்கோரலே (பி.1980)** ஆகியோரால் உருவாக்கப்பட்ட அனிமேஷன் ஆவணப்படமான **'is this an architectural documentary?' (2023)**, அக்டோபர் 5 அன்று செக் குடியரசில் நடந்த திரைப்படம் மற்றும் கட்டிடக்கலை விழாவின் 14வது நிகழ்வில் சிறப்பு முதல் காட்சியாக இடம்பெற்றது. இது எமது கண்காட்சியான '88 ஏகர்கள்' க்காக MMCA இலங்கையால் நியமிக்கப்பட்டது.

**நிறுவன புரவலர்களின் கலை உலா**

செப்டம்பர் மாதம், MMCA இலங்கை நிறுவனர்களின் குழு ஒன்று இலங்கையின் தென் மாகாணத்திலே எடுத்தாளப்பட்ட கலை உலாவிற் கலந்து கொண்டது

(செப்டம்பர் 20–21). கலைஞர்களின் ஸ்டுடியோக்களைப் பார்வையிடுவதோடு மட்டுமல்லாமல், கட்டிடக் கலைஞர் **பிலிப் வீரரத்ன** தலைமையில் ற்றடாவொ ஆண்டோ மற்றும் ஷிகெரு பான் ஆகியோரால் வடிவமைக்கப்பட்ட வீடுகளுக்கும், கட்டிடக் கலைஞர் **சுமேத கெலகமவுனால்** ஜெஃப்ரி பாவாவின் (1919–2003) ரெட் கிளிஃப்ஸ் மிரிஸ்ஸாவிற்கும் இக் குழுவினர் அழைத்துச் செல்லப்பட்டனர்.

**எதிர்கால நோக்கு**

எமது பணிகள் அனைத்திலும் முக்கியமானதாக இருப்பது MMCA இலங்கைக்கான ஒரு நிரந்தர வீட்டை நிறுவுவதற்கான எமது பயணம்; இலங்கையின் முதலாவது நவீன மற்றும் சமகால கலை அருங்காட்சியகத்தை உருவாக்கும் எங்கள் நோக்கம்.

அடுத்து வருவது, 2026 ஜனவரி மாதம் நாங்கள் முன்னெடுக்கும் எமது முதலாவது பொப்-அப் கண்காட்சி. இடம் தேடும் எமது பயணம் தொடர்கையில் இடம்பெறும் இக் கண்காட்சியிலும் எமது பணி தொடர்கிறது; பொது மக்கள் இலவசமாகப் பார்வையிடலாம், கற்றுக் கொள்ளலாம், உரையாடலாம்.